(2) ஒவ்வொரு கல்லூரி மாணவர்களின் பிரதிநிதிகளையும் அழைத்து கல்லூரிக் கல்வி இயக்குநர் திங்களொருமுறை விவாதித்து, அவர்களது வேண்டுகோள்களை எடுத்துச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். இக்கூட்டங்களுக்கு கல்லூரி முதல்வர்களும், வேண்டுகோள் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களும் (உதாரணமாக பேருந்து வசதி பற்றிய வேண்டுகோள்களுக்கு அரசு போக்குவரத்து இயக்குநர்) அழைக்கப்படவேண்டும்.

(3) மாணவர்களும், அதிகாரிகளும் ஒரு சுமுகமான சூழ்நிலையில் கலந்து பேசுவதினால் எல்லா சிக்கல்களுக்கும் தீர்வு கண்டுவிடலாம் என்று அரசு முழு நம்பிக்கையோடு உள்ளது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1972)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

கிழக்குத் தஞ்சாவூரில் உழவுத் தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றி விசாரணை செய்வதற்காக 1968 டிசம்பரில் மாநில அரசால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் பரிவுரைக்கிணங்க, தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1969) சாற்றப்பட்டது. பின்னர் இதற்குப் பதிலாக, தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969) இயற்றப்பட்டது. நடவுக்கான காலத்திலும், அறுவடை காலத்திலும் எல்லாவகையான வேலைகளுக்கும் தாம் வேலைக்கு வைத்துள்ள உழவுத் தொழிலாளருக்கு நில உரிமையாளர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நியாய ஊதியங்களைக் கொடுப்பதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. நியாய ஊதியங்கள் கொடுப்பதை உறுதியாகச் செயற்படுத்துவதற்கும் இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம், கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தின் ஆறு வட்டங்களில் 1969 ஆகஸ்டு 5-ஆம் நாளில் செயலுக்கு வந்துவிட்டதாகக் கருதப்பட வேண்டும். இது 1972 ஆகஸ்டு 4-ஆம் நாள் இறுதிவரை செயலில் இருந்திருக்கவேண்டும்.

@ 382-383 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

 தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர், நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1972)

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 25

1972 ஆகஸ்டு 4-ம் நாளுக்குப் பின்னரும் இச்சட்டத்தைத் தொடர்ந்து செயலில் வைத்திருப்பதன் அவசியத்தை அரசு ஆழ்ந்து பரிசிலித்துப் பார்த்து, இச்சட்டத்தின் ஆட்சிக் காலத்தை 1972 ஆகஸ்டு 4-ம் நாளிலிருந்து மேலும் நீட்டிக்கப்படுதல் வேண்டுமென்று முடிவு செய்தது. இம்முடிவுக்குச் செயல் வடிவம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/1972) ஆளுநர் அவர்களால் சாற்றி உரைக்கப்பட்டது.

இதன் பின்னர் இச்சட்டத்தை நிலையான ஒன்றாக வைத்திருக்கவும் அறிவிப்பு வெளியிட்டு நியாய ஊதிய விதங்களை மாற்றியமைக்க அரசுக்கு அதிகாரமளிக்கவும், ஒரு முறை வரையறுக்கப்பட்ட நியாய ஊதியங்கள் ஐந்தாண்டுக் காலத்திற்கு மேற்படாத கால அளவுக்கு ஒருமுறை மறு ஆய்வு செய்யப்படவும் இச்சட்டத்தைத் திருத்துவதென்று அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்கவும், தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு உழவு தொழிலாளர் நியாய ஊதியங்கள் (திருத்த) அவசரச் சட்டத்துக்கு (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/1972) பதிலாகச் செயலில் இருக்கவும் இந்தச் சட்ட வரைவு விழைகிறது.

இதை ஏற்குமாறு இம்மேலவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி, "சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1972) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1972) நிறைவேற்றப்படவேண்டும்".

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயக் கூலி கொடுப்பதற்கான சட்டம் தரசமயத்திலே கிழக்குத் தஞ்சையிலே உள்ள பகுதிகளில் ஆறு தாலூகாக்களில் நிலவி வருகிறது. 1969 ஆம் ஆண்டுக்கு முன்னால் இது பற்றிய பிரச்னைகள் பல கட்சியினராலே எழுப்பப்பட்டு அங்கு விவசாயத்தை யாரும் நடத்த முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு அதற்கு மேல் பிரச்னையைப் பற்றி ஆராய்வதற்கு திரு. கணபதியா பிள்ளை என்ற முன்னாள் நீதிபதியின் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு இதுபற்றி அது ஒரு முடிவு செய்தது. அறிக்கை வெளியிடப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் ஒரு கமிஷன் நியமித்து இது பற்றி ஆராய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று அதிலே குறிப்பிட்டு இருந்தார்கள். ஆகஸ்ட் 4-ஆம் தேதியோடு அந்த 3 ஆண்டு முடிந்துவிட்டது. ஆகவே மறுபடியும் அந்தப் பிரச்னை எழுப்பப்பட்டு தஞ்சை மாவட்டத்தில் கூலித் தகராறு ஏற்பட்டது. ஆகஸ்ட் 4 ஆம் தேதிக்கு முன்னதாகவே நம்முடைய அரசு இதை கவனித்திருந்தால் நிலைமையைத் தீர்த்திருக்க முடியும். ஆகஸ்ட் 4-ஆம் தேதி வரையில் விட்டு விட்டு, அதற்குப் பிறகும் உடனடியாக ஒன்றும் செய்யாததினால், பிரச்னைகள் தோன்றின. இச்சமயத்தில் இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 12-ந் தேதி தஞ்சைக்கு வந்திருந்து காலை 9 மணிக்கு கூட்டம் ஆரம்பித்து இரவு 9 மணி வரை கிட்டத்தட்ட 12 மணி நேரம் அந்த மாவட்டத் தொழிலாளர் தலைவர்கள், எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள், நிலச் சுவான்தாரர்கள், அரசு தரப்பினர் ஆகியோர்கள் அடங்கிய ஒரு முத்தரப்பு மாநாடு போட்டு கூலி நிர்ணயம் செய்தார்கள். அதற்குள்ளாக அரசாங்கம் அப்போது இருந்த கூலியே ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் நிர்ணயம் செய்திருந்தார்கள். தஞ்சை நிலச்சுவான்தார்கள் அரசாங்கம் அவசரச் சட்டத்தின் மூலம் நிர்ணயித்த கூலியைத்தான் தருவோம், முத்தரப்பு மாநாட்டிலே நிர்ணயித்த கூலியைத் தர மாட்டோம் என்று சொல்லி, அதனால் அங்கு ஒரு தகராறு ஏற்பட்டு, போலீஸ் துணை தேவைப்பட்டிருக்குமானால், போலீஸ் அதிகாரிகள் யாருக்குப் பாதுகாப்பு அளித்திருப்பார்கள் என்பது சிக்கலான பிரச்சினை. அரசாங்கம் அவசரச் சட்டம் கூறிய கூலிக்கு பாதுகாப்பு அளிப்பார்களா அல்லது

கலெக்டர் அவர்களுடைய தலைமையில் ஏற்பட்ட முடிவுக்குப் பாதுகாப்பு அளிப்பார்களா? என்ற சட்டப் பிரச்னையை ஆராய்ந்து கொண்டிருந்தால் நிலைமை மிக மோசமாகப் போயிருக்கக்கூடும். எனினும் யதார்த்த நிலைமையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் சிறந்த முறையிலே முடிவு எடுத்ததற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூலி உயர்வு வேண்டும் என்று சொல்லுகிறபோது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேரவையிலே இது பற்றிப் பேசியிருக்கிறார்கள். கூலி உயர்வு எப்படி அமைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டு தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, மாநிலம் முழுவதற்கும் ஒரு கமிஷன் போடப்பட்டு அது இந்தக் கூலிப் பிரச்னையை ஆராயும் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அடிப்படையிலே என்று சொல்லுகிறபோது

"It will take into consideration such factors as availability of labour in the area, prices of essential commodities and rise in the cost of living".

என்ற ஒரு அடிப்படையை அவர்கள் சொன்னார்கள். தொழிலாளர்கள் கிடைக்கும் நிலை, விலைவாசி உயர்வினால் பாதிப்பு, வாழ்க்கைச் செலவு ஆகியவை எவ்வாறு இருக்கிறது என்பது கருத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்கள். கூலியைக் கொடுக்கவேண்டியவர்கள், கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்களா? The capacity of the owners to pay the wages என்ற அடிப்படையிலே கணபதியா பிள்ளை கமிஷனில் ஆராயப்பட்டு இருக்கிறது. ஆங்காங்குள்ள நிலச்சுவான்தார்கள் கூலியைக் கொடுக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறார்களா என்பதையும் பார்த்து ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களைப் பற்றி சொல்லுகிறபோது ஒரு தொழிலாளர் குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூ. 125 அளவிலாவது வருமானம் வரவேண்டும் என்று கணக்கிட்டு, விவசாயத் தொழிலாளர்கள் பெறும் வருமானம் மாதம் ரூ. 60, 65 தான் வருகிறது என்ற அடிப்படையையும் மனத்திற்கொண்டு அவர்களுக்கு ரூ. 90 அளவிலாவது மாதக் கூலி கிடைக்கவேண்டும் என்று கணபதியா பிள்ளை கமிஷன் தீர்மானித்தது. குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ. 125ஆவது தொழிலாளர்களுக்கு இருந்தால் தான் நல்லது என்ற அடிப்படையையும் சொல்லிவிட்டு நிலச்சுவான்தார்கள் கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லாததால் ரூ. 90 என்று நிர்ணயித்தார்கள்.

1972 ஆகஸ்டு 25] [திரு: ஜி. சுவாமிநாதன்]

தஞ்சையிலே உள்ள நிலச்சுவான்தார் நிலைமையை இங்கு சொல்ல விரும்பு கிறேன். முன்னமே நான் இம்மன்றத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல் தஞ்சை மாவட்டத்திலே உள்ள நிலச்சுவான்தார்கள் என்று சொன்னல் பெரிய நிலப்பிரபுக்கள், பெரிய பணக்காரர்கள் என்ற ஒரு தவருன அபிப்பிராயம் நிலவி வருகிறது. தஞ்சை நிலச் சுவான்தார்கள் பெரிய நிலப்பிரபுக்களாக முன்பொரு காலத்தில் இருந்திருக்கலாம். இன்றைய தினம் அது ஒரு 'இமேச்' என்று சொல்லப் படுகிறது உருவகமே தவிர நிலைமை அப்படிப் பட்டதல்ல. தஞ்சையிலே இன்றுள்ள நிலைமையைப்பற்றி பத்திரிநாத் அவர்கள் குத்தகை ஆவண மசோதாவிற்கான இயக்குநராக இருந்தபோது நிலைமையைப் பற்றி தெளிவாகத் தெரிவித்திருக்கிருர். தஞ்சை மாவட்டத்தில் 1 ஏக்கருக்கு உள்ளாக நிலம் வைத்திருப்பவர்கள் 48 சதவிகிதம் பேர்கள். மற்றுமொரு 41 சதவிகிதத்தினர் 1 ஏக்கரிலிருந்து 5 ஏக்கர் வரை வைத்திருக் கிருர்கள். எனவே மொத்தமுள்ள நிலச்சுவான்தார்களில் 99 சதவிகிதத்தினர் 5 ஏக்கருக்கு உள்ளாக நிலம் வைத்திருப்பவர்கள்தான். கணபதியா பிள்ளை கமிஷனில் தஞ்சை மாவட்டத்தில் இருபோக நிலம் என்று சொன்னல் ஏக்கருக்கு ஆண்டு வருமானம் ரூ. 550 என்றும் ஒரு போக நிலம் என்றல் ரூ. 230 என்றும் கணக்கிட்டிருக்கிருர்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள 14 லட்சம் ஏக்கரில் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் இருபோகமாகவும், 99 சத விகிதம் நிலச்சுவான்தார்கள் 5 ஏக்கருக்கு உள்ளாக வைத்திருக்கிருர்கள் என்று கவனிக்கிறபோது அவர்களுக்கு மாதம் 230 ரூபாய்க்கு மேல் வருமா னம் இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் நிலைமையைப் பார்க்கிறபோது இந்த நிலச் சுவான்தார்கள் இன்னும் அதிக கூலி கொடுக்கவேண்டும் என்று சொல்வதில் சோஷலிசம் இல்லை என்பதையும் கருத்திலே கொள்ளவேண்டும். சோஷலிசம் என்பது இருப்பவனிடத்திலே இருந்து இல்லாதவனிடம் கொடுப் பதாகும். ஒரு ஏழையின் பணத்தை இன்னொரு ஏழைக்குப் பகிர்வது சோஷ லிசமாகாது. இந்த அடிப்படையில் அங்குள்ள நிலச்சுவான்தார்கள் உயர்ந்த கூலியைக் கொடுக்க முடியுமா என்பதையும் ஆராயவேண்டும். ரூ. 230 மாத வருமானம் வரக்கூடியவர்களை ஏழைகள் என்று சொல்லலாமா என்று கேட்க லாம். ஆனல் மாதம் ரூ. 230 ஊதியம் கிடைக்கக்கூடிய ஒரு 4-ம் தர ஊழியரை ஏழை என்று சொல்லுகிருர்கள். எனவே இந்தப் பிரச்னை அரசியல் பிரச்னை அல்ல. பொருளாதாரப்பிரச்சினையாகும். பொருளாதாரப் பிரச்னையை அரசியல் பிரச்னையாக ஆக்கி சில கட்சிக்காரர்கள் தங்கள் லாபத்திற்கு இதைப் பயன்படுத்த முயற்சிக்கிருர்கள். அரசு தனது முடிவையும் அரசியல் ரீதியாக

ஈடுத்தால் பல லட்சக்கணக்கானவர்கள் பாதிக்கப்படக்கூடும். கூலி கொடுக்கப்போகிறவர்கள் நிலச்சுவான்தார்கள் மட்டுமல்ல. தஞ்சையிலுள்ள குத்தகைக்காரர்களாக இருப்பவர்கள் விவசாய வருமானத்தில் 60 சதவிகிதம்தான் அடைகிறுர்கள். அவர்களும் அதிகக் கூலி கொடுக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் லட்சக்கணக்கான குத்தகைக்காரர்கள் இருக்கிறுர்கள். அவர்களுக்கு 5 ஏக்கர்தான் உச்ச நிலமாக குத்தகை வைத்துக்கொள்ளலாம் என்று சட்டம் இயற்றியிருக்கிறேம். 5 ஏக்கர் உள்ள ஒரு குத்தகைக்காரரின் வருமானம் மாதம் ஒன்றுக்கு ரூ. 140 தான். உழுபவனுக்கு நிலம் என்று சொல்லும் போது குத்தகைதாரர்கள் எல்லாம் நிலத்தையும் தாங்களே உழக்கூடியவர்களாக இல்லை. ஒரு ஏக்கராவை தாங்கள் உழுது பாக்கி உள்ளதை விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு உழுகிறுர்கள். எனவே அவர்களும் அதிகக் கூலியைக் கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்கு முன்னுல் அவர்களாலே முடியுமா என்பதையும் அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதையொட்டி இன்னும் சில பிரச்னைகள் எழுப்பப்படுகின்றன. விவசாயத் தொழிலாளர்களாக இருக்கிறவர்கள் பலகாலமாகக் கேட்பது அடிப்படை ஊதியம். ஆனுல் அடிப்படை ஊதியம் என்பது ஒரு நிறுவனத்தில் நிரந்தரமாக உள்ள ஊழியர்களுக்கே கொடுக்கப்படுவதாகும். விவசாயத் தொழிலாளர்கள் நிரந்தரமற்ற, அன்றுட கூலி வேலை செய்பவர்கள். விவசாயத் தொழிலாளர்கள் நிரந்தரமற்ற தொழிலாளர்களாக, அன்றுட வேலை செய்பவர்களாக இருக்கிறபோது அவர்களுக்கு, அடிப்படை ஊதியத்தை அளிக்க நிலச் சுவான்தார்களே மொத்தப் பொறுப்பு என்று சொல்வது தவருனதாகும். ஆனுல், அதே சமயத்தில், அரசாங்கம் சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கணபதியா பிள்ளை கமிஷனில் சொன்னுர்கள். அவற்றின் துவக்கம் கூட கடந்த மூன்றுண்டுகளாக அரசால் செய்யப்படவில்லை. நம் மாநிலத்தில் 20 லட்சம் நிலமற்ற தொழிலாளர்கள் இருக்கிறுர்கள். நில உச்சவரம்பு சட்டங்களின் மூலம் 20,000 நிலமற்ற விவசாயத் தொழிலாளருக்குக் கூட நிலம் கொடுக்கமுடியாத நிலை இருக்கிறபோது இந்தப் பிரச்னையை கூலி உயர்வால் தீர்க்க முடியாதென்பது வெளிப்படை. இந்திய நாட்டில் 70 சதவிகித விவசாயிகள் நிலத்தை நம்பியே வாழ்கிறுர்கள். அமெரிக்காவில் 12 சதவிகிதம் பேர்கள்தான் உணவு உற்பத்தியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறுர்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள 6 லட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டில் 7 மாதங்களுக்கு மேல் வேலையிருப்பதில்லை. கணபதியா பிள்ளை கமிஷனில் இவர்கள் நன்மைக்காக விவசாயக் கழிவுப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட சிறு தொழில்களை ஆரம்பித்து வேலை கொடுக்க

வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அப்படிக் கூறி மூன்று ஆண்டுகள் ஆகியும், தலைவரவர்களே, 6 லட்சம் தொழிலாளர்களுக்கு அல்ல, 60 பேர்களுக்குக் கூட வேறு தொழிலுக்காக வாய்ப்பு அளிக்க இந்த அரசு தவறிவிட்டது என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, கீழ்த் தஞ்சையிலே கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை ஏராளமான பேர்கள் குத்தகைதாரர்கள் என்ற பேரால், 10, 20, 25 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டு நிலச் சுவான்தாரர்களை விட நல்ல முறையில் வாழ்க்கை நடத்திக்கொண்டு வருகிறார்கள். இதையெல்லாம் சரிவரக் கவனித்து ஒரு குத்தகைதாரர் ஐந்து ஏக்கராதான் வைத்துக்கொள்ளலாம் என்ற சட்டப்படி அதற்கு மேல் வைத்துக் கொண்டிருந்தால் அவைகளை எடுத்து மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டுமென கணபதியா பிள்ளை கமிஷன் கூறியுள்ளது. இதையும் இந்த அரசு செய்யத் தவறிவிட்டது என்று கூறி, இந்த இரண்டு காரியங்களையும் செய்தால் தொழிலாளர்களின் பொருளாதார நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, கணபதியா பிள்ளை கமிஷனுக்குப் பிறகு இப்போது, பிப்ரவரியிலிருந்து மூன்று மாதப் பருத்தி பயிரிடுவது இருந்துவருகிறது. ஆகவே, நான்கு மாதம் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று உறுப்பினர் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: பருத்தி போடவேண்டும் என்று திட்டம் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அத்திட்டம் இப்பொழுது தான் குறைந்த அளவு ஏக்கரில் தஞ்சை மாவட்டத்தில் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சமயத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். காவிரி நீர்ப் பிரச்னையைப் பொறுத்தவரையில், அது தீராமல் இன்னும் கால தாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்னையைப் பற்றி மூன்று மாதங்களுக்கு முன்பே நமது முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்திலே கூறி, தஞ்சையே வரண்டுவிடும் என்ற பயம் மைசூர் மாநிலத்தில் அணை கட்டிக்கொண்டே இருப்பதால் ஏற்பட்டிருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். இப்போதும் மைசூர் மாநிலத்தில் அணைகளைக் கட்டிக்கொண்டே இருக்கிறார்கள். காவிரியில் தண்ணீர் வருவது குறைந்து விட்டால் ஏராளமான நிலங்களை தஞ்சை மாவட்டத்தில் சாகுபடி செய்ய இயலாது. இப்போதே கூட குறுவை சாகுபடி செய்வதற்கு தண்ணீர் இனி கிடைக்குமா என்ற ஏக்கம் விவசாயிகள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் தஞ்சை

மாவட்டத்தில் ஏராளமான தொழிலாளர்கள் மேலும் பல மாதங்களுக்கு வேலை இல்லாமல் இருக்கக்கூடிய நிலை உருவாகும். இந்தப் பிரச்னைகளையெல்லாம் சிறந்த முறையில் அரசு ஆலோசிக்க வேண்டுமென்று சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்தக் கூலி நிர்ணயச் சட்டம் பற்றி மாண்புமிகு திரு. சுவாமிநாதன் அவர்கள் மிக விளக்கமாகப் பேசினார்கள். பல சிக்கல்களை எடுத்துச் சொன்னார்கள். இந்த மாதம் நான்காம் தேதி இந்தச் சட்டம் காலாவதி ஆயிற்று. காலாவதி ஆனபிறகு சட்டமன்றம் 9 ஆம் தேதி கூடுகிறது. இந்த இடைவெளியில் சட்டம் இல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக இந்தச் சட்டத்திற்கு ஆயுளை நீட்டித்து அவசரச் சட்டம் பிறப்பித்திருக்க வேண்டும். அவசரச் சட்டம் போடப்பட்ட பிறகு, இந்தச் சட்டத்தை முதலில் சட்டமன்றத்திற்குக் கொண்டு வந்து சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும். அதற்காக சட்டமன்றத்தில் கொண்டு வந்தோம். ஆனால் இதற்கிடையில் தஞ்சையில் விவசாயக் கூலி உயர்வு வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. கணபதியா பிள்ளை கமிஷனில், மூன்று ஆண்டுக்குப் பிறகு கூலி நிர்ணயம், கூலி உயர்வு பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகள் கூலி உயர்வு வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள். தமிழக முதலமைச்சர் அவர்களும், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் தஞ்சையில் கூடிப்பேசி தீர்வு காணுவதற்கு முயற்சித்தோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டது போல, காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணி வரை உட்கார்ந்து பேசினோம். ஒரு முடிவு எடுக்கப்பட்டது. நான் அப்போது கடலூரில் இருந்தேன். இந்த முடிவு பற்றிய செய்தி கேட்டபோது ஆச்சரியமடைந்தேன். ஒரு பெரிய பாரம் நீங்கியது போல இருந்தது. இந்த முடிவை சட்டத்தில் நுழைப்பதற்காகத் தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கணபதியா பிள்ளை கமிஷனில், மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மறு பரிசிலனை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, இப்போது கொண்டு வந்துள்ள கூலி நிர்ணயச் சட்டம், அந்த கணபதியா பிள்ளை கமிஷனின் யோசனைக்குப் பிறகு, நாட்டில் எழுந்துள்ள நிலைமையைப் பொறுத்து உருவாக்கப்பட்டிருக்கின்ற சட்டமாகும். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும் போது ஒரு கருத்தைக் கூறினார்கள். ஒரு கொடுமையான நிலைமை இருக்கிறது, இவ்வளவு கூலி கொடுக்க இயலுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது நியமிக்கப் போகின்ற கமிஷன் அதைப் பற்றியெல்லாம் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அந்தக்

1972 ஆகஸ்டு 25] [திரு. ப. உ. சண்முகம்]

கமிஷன் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. இதையெல்லாம் அது செய்ய வேண்டுமென்று தான் சொன்னேன். கமிஷன் என்னென்ன காரியங்களைச் செய்யும், என்னென்ன சட்டங்கள் இயற்றப்படும் என்று கூறவில்லை. அப்படிப்பட்ட சட்டங்கள் இனிமேல் தான் பிறப்பிக்கப் பட வேண்டும். அடிப்படையாக தமிழ் நாட்டில் எழுந்துள்ள கிளர்ச்சியை ஒட்டி, முதல்வரவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிற கூலி நிர்ணயத்தை அமுலாக்குவதற்காகத் தான் இந்தச் சட்டம். எனவே, கமிஷன் நியமிக்கப்பட்ட பிறகு இவைகள் பரிசிலிக்கப்பட வேண்டிய விஷயங்கள். இப்போது கொண்டு வரப்பட்ட சட்டம் கீழத் தஞ்சைக்கு மட்டும் தான் பொருந்தும், மேலத்தஞ்சைக்கு இல்லை. மற்ற மாவட்டங்களுக்கும் இது பொருந்தாது. இதே கூலி மேலத் தஞ்சைக்கும் மற்ற மாவட்டங்களுக்கும் கொடுக்க இயலாது என்பதை அங்கத்தினர்கள் நன்ருக உணருவார்கள். அதில் தற்போது புகுந்து பதில் சொல்ல நான் விரும்பவில்லை. கமிஷன் அதைப்பற்றித் தீர்ப்பளிக்கும். முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ள ஒப்பந்தத்திற்குப் பிறகு அதனடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது, குத்தகைதாரர்கள்பற்றி ஒரு விளக்கம் சொன்ஞர்கள். நாட்டிலே சொந்தமாக நிலம் வைத்திருக்கிறவர்கள் எப்படியெப்படி இருக்கிருர்கள், யார் யார் குத்தகைக்கு விட்டு எப்படி செய்கிருர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் பற்றிக் கூட கமிஷன் பரிசீலனை செய்யும். இந்தச்சட்டம் 30-ஆம் தேதியோடு பரிபூர்ணம் அடைந்து விடுகிறது. அப்படி அடைந்ததற்குப் பிறகு குத்தகை தாரர்கள் யார் யார் உள்குத்தகைக்கு விட்டிருந்தாலும் அதை ரத்து செய்யும் அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. இந்த அதிகாரத்தின்படி யார் யார் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருந்தாலும், இதில் நிச்சயமாக அடிபட்டுப் போகும் என்று நம்புகிறேன். குத்தகைதாரர்கள் வளமாக இருக்கிருர்கள், சொந்தமாக வேளாண்மை செய்கிறவர்கள் அப்படி வளமாக இல்லாமல் இருக்கிருர்கள், சிரமப்படுகிருர்கள் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஐந்து ஏக்கர் என்று சொல்லி உபரி நிலத்தைப் பிரித்துக் கொடுத்தாலும் சரி இந்தப் பிரச்சினை இருந்துகொண்டு தான் இருக்கும். இதை மூடி மறைக்க வேண்டிய அவசியமில்லை. கொடுக்க இயலுமா என்பதுதான் பிரச்னை. அது பிறகு முடிவு செய்யவேண்டிய ஒன்று. ஒரு குடும்பம் ஐந்து ஏக்கர் பயிரிட முடியுமா என்று சொன்ஞர்கள். அது இதற்கு அப்பாற்பட்ட ஒன்று. எனவே, அதைத் தனியாகப் பரிசீலிக்கலாம். ஒவ்வொருவருக்கும் நிலம் சொந்தம் என்று சட்டம் வந்தால், என்னவாகும் என்பதைப் பிறகு தான் யோசிக்க வேண்டும்.

இப்போது சட்டம் இல்லாத நேரத்தில், சட்டம் கொண்டு வந்தால் என்னவாகும் என்று பேசுவது சரியல்ல. மற்றப்படி பிரச்னைகளைப் பரிசீலிப்பதற்கு கமிஷன் போட இருக்கின்றோம். அதில் முடிவெடுக்கலாம். எனவே இந்தச் சட்டத்தை மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1972) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1972) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண திருத்த சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

@ 384–385-ஆம் பக்கத்தில் இணைப்பு VI -ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS